வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05

21.05.2024 செவ்வாய்க்கிழமை

இதழ் : 142

பக்கங்கள் : 12







# ஐ. எஸ். பயங்கரவாத அமைப்பினரென 4 இலங்கையர் இந்தியாவில் கைது!

சென்னை, மே 21

**ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் 4 இலங்கையர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டனர்.**

**குஜராத் மாநிலத்தின் தலைநகரான அகமதாபாத்தில் உள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் விமான நிலையத்தில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.**

கைதான நால்வரும் இலங்கையர்களாவர். இவர்களை அழைத்துச் செல்ல வேண்டியவருக்காக விமான நிலையத்தில் காத்திருந்தபோது நால்வரும் கைது செய்யப்பட்டனர் என்று இந்திய பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

கைதான நால்வரும் சென்னையிலிருந்து அகமதாபாத்தை சென்றடைந்தனர் என்றும் இவர்கள் பாகிஸ்தானை சேர்ந்தவர்களுடன் தொடர்பில் இருந்தனர் எனவும் குஜராத் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



இந்தியாவின் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் வெளியிட்ட கைதானவர்களின் படம்

இன்றைய தினம் ஆரம்பமாகும் ஐ. பி. எல். தொடரின் இறுதியாட்டத்துக்கு முந்தைய சுற்றுப் போட்டி (பிளேஓவ்) தொடரில் விளையாடவுள்ள மூன்று அணிகளின் வீரர்கள் விமான நிலையத்துக்கு வருவதற்கு முன்னதாகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

எனினும், கைதான நால்வரும் என்ன நோக்கத்தில் அகமதாபாத் விமான நிலையத்துக்கு வருகை தந்தனர் என்பது தெரியவில்லை என்றும் அவர்களை இரகசியமான இடத்தில் தடுத்து வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தை அடுத்து

11

# ஜனாதிபதியுடன் எவ்வித இணக்கப்பாடும் இல்லை

## பொதுஜன பெரமுன விளக்கம்

கொழும்பு, மே 21

இடைக்கால ஜனாதிபதியாகவே ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியிடம் எந்தவிதமான இணக்கப்பாட்டையும் எட்டவில்லை என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்படி தெரிவித்தார்.

மேலும்,

11

# எதிர்காலத்தில் தமிழ் அரசு எங்களுடன் இணையும்!

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம், மே 21

இலங்கை தமிழ் அரசுக் கட்சி எதிர்காலத்தில் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் இணைந்து கொள்ளும் வாய்ப்புகள் உள்ளன என்று கூறியுள்ளார் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

நேற்று அவர் தனது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

11

# வற்றாப்பளை பொங்கல்; பல்லாயிரம் பேர் பங்கேற்பு



முல்லைத்தீவு, மே 21

வரலாற்று பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வைகாசி பொங்கல் திருவிழா நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது.

பொங்கல் தினமான நேற்று முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து மடப்பண்டம் எடுத்துவரப்பட்டது. தொடர்ந்து விசேட பூசைகள் நடைபெற்று நேற்றிரவு பொங்கல் நடைபெற்றது.

11

# இராணுவத்திடம் சரணடைந்தோரின் குழந்தைகளுக்கு என்ன நடந்தது?

## மன்னிப்பு சபையின் செயலாளர் கேள்வி



கொழும்பு, மே 21

போரின் இறுதியில் படையினரிடம் குடும்பமாக சரணடைந்தவர்களின் குழந்தைகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் சர்வதேச மன்னிப்பு சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர்,

"இலங்கையின் உள்நாட்டு போர் முடிவடைந்து 15 வருடங்கள் நிறைவடையும் காலத்தில் எனது பயணம் இடம்பெற்றுள்ளது. மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் அறிவதற்காகவே நான்

11

# நீதிமன்ற நடவடிக்கையை சீர்குலைப்பதற்கு முடியாது

## சிறை அதிகாரிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 21

சம்பள அதிகரிப்பு கோரும் சிறைச்சாலை அதிகாரிகளின் கோரிக்கை நியாயமானது. அதனால் அவர்களுக்கு 15ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம். என்றாலும் நீதிமன்ற நடவடிக்கைகளை சீர்குலைக்க அவர்களுக்கு முடியாது. நீதிமன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் தொழிற்சங்க

11

# இன்று துக்க தினம்!

கொழும்பு, மே 21

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இன்று செவ்வாய்க்கிழமையை தேசிய துக்க தினமாக அரசு அறிவித்துள்ளது.

அரச நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உட்பட 9 பேர் ஹெலிகொப்டர் விபத்தில்

11

# இராணுவ வாகனம் மோதி வீதியோரம் நின்ற யுவதி பலி!


## பிறந்ததினமே இறுதிநாளாக மாறிய சோகம்!

யாழ்ப்பாணம், மே 21

வீதிச் சந்தியை கடப்பதற்காக வீதியின் ஓரத்தில் சைக்கிளுடன் காத்திருந்த யுவதியை இராணுவ வாகனம் மோதித் தள்ளியதில் அவர் படுகாயமடைந்து உயிரிழந்தார்.

பிறந்த தினத்திலேயே யுவதி பலியான சம்பவம் புத்தூர் பகுதியில் பெரும்

11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசு கட்சியின் மத்திய செயல்குழுக் கூட்டம் நடந்து முடிந்திருக்கின்றது. எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள்தான் என்றாலும் அதில் மிகக் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களும் உண்டு.

அந்தக் கூட்டத்தில் இரண்டு முக்கிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டன என்று செய்திகள் வெளிவந்திருந்தன.

முதலாவது விடயம், கட்சியின் நிர்வாகிகள் தெரிவு தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவு. அதாவது மீண்டும் தேர்தலை நடத்தி புதிய நிர்வாகிகளைத் தெரிவுசெய்வது என்றும் அதுவரை தற்போதைய நிர்வாகம் தொடரும் என்பதும் முதலாவது முடிவு.

இரண்டாவது, தமிழ் பொது வேட்பாளர் பற்றியது. கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் இருவரைத் தவிர மற்றைய அனைவரும் (மொத்த உறுப்பினர்களில் அரைவாசிப் பேர்தான் கலந்துகொண்டார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது) பொதுவேட்பாளருக்கு எதிராக கருத்துச் சொல்லியிருக்கின்றனர்.

அதற்குக் காரணம் என்ன என்பது ஒன்றும் ஆராய்ச்சிக்குரியது அல்ல. தேர்தல் அறிவிப்பு வெளிவந்த பின்னர் - அதாவது, அவசரப்படாமல் முடிவெடுப்பது என்று கடைசியில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதாம்.

சம்பந்தன் ஐயா சொன்னாரென சுமந்திரன் அறிக்கை வெளியிட்டதுபோல கட்சிக்காரர்கள் அவசரப்படவில்லை. இதில் கவனிக்கப்பட வேண்டியது. சம்பந்தனின் பேச்சை கட்சிக்காரர்கள் தப்பாமல் கவனத்தில் எடுத்திருக்கிறார்கள். ஆனால், இதற்கு முன்னரும் சம்பந்தன் கட்சி விடயத்தில் ஒரு தீர்க்கமான யோசனையை முன்வைத்திருந்தார்.

அதாவது, கட்சியின் கடந்தகால வரலாற்றைக் கருத்தில்கொண்டு, தலைவர் தெரிவின்போது தேர்தல் நடத்தாமல் ஒரு சுமுகமான முடிவுக்கு வாருங்கள் என்று சம்பந்தன் ஐயா முன்னர் விடுத்த வேண்டுகோளை உதாசீனம் செய்தவர்கள் இப்போது பொதுவேட்பாளர் விடயத்தில் சம்பந்தனின் ஆலோசனையை கேட்டிருக்கின்றனர். முதல் விடயத்திலும் சம்பந்தன் ஐயாவின் ஆலோசனையைக் கேட்டிருந்தால் இன்று கட்சி நீதிமன்றத்தில் நின்றிருக்காது.

அதாவது, சம்பந்தனின் ஆலோசனையை அந்த விடயத்தில் இப்போதும் கேட்கத் தயாரில்லாதவர்கள்தான் மற்றைய விடயத்தில் அவரை அனுசரித்து முடிவெடுத்திருக்கின்றனர். நேற்று முன்தினம் நடந்த கூட்டத்திலும்கூட கட்சிக்கு நிர்வாகிகளை தெரிவுசெய்வதற்காக மீண்டும் தேர்தலை நடத்துவது என்றே முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது.

எதற்காக இத்தகைய முரண்பாடு என்பதை ஆழ்ந்து கவனிக்க விளைந்தால் பல விடயங்கள் சந்திக்கு வந்துவிடும்.

அடிக்கடி ஜனாதிபதி செயலகத்தில் காணப்படும் எம். பி. ஒருவர் இந்த பொது வேட்பாளர் விடயத்தில் கடும் எதிர்ப்பை அடிக்கடி வெளியிட்டு வருகின்றார். அண்மையில், அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணம் வந்திருந்துபோதும் அவரிடமும் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் அதற்கு எதிராகவே கருத்துத் தெரிவித்திருந்தார் என்று கூறப்பட்டது.

அவர், எதற்காக ஜனாதிபதி செயலகத்துக்கு அடிக்கடி போய் வருகிறார் என்பது இதுவரை தெரியவரவில்லை. அவர் தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத்தான் அப்படி போய்வருகின்றார் என்றால், அப்படி போய்வருவதனால் தமிழ் மக்களுக்கு கிடைத்த நன்மைகளை அவர் பட்டியிலிட்டிருப்பார். அவ்வாறு போய்வரும் அவர் ரணிலுக்கு தனது ஆதரவை ஏற்கனவே தெரிவித்திருப்பார் என்பது எதிர்பார்க்கக்கூடியது தான்.

அதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது, தந்தை செல்வா தனது கடைசிக் காலத்தில் செய்த ஒரு விடயம் பலருக்கும் நினைவிருக்கலாம். சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியின்போது கொல்வின் ஆர். டீ சில்வா தயாரித்த அரசியலமைப்பு சட்டம் கொண்டுவரப்பட்டபோது அந்த அரசியலமைப்பு சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று உலகத்துக்கும் நாட்டுக்கும் காட்டுவதற்காக தனது பாராளுமன்ற பதவியை இராஜிநாமா செய்துவிட்டு, இடைத் தேர்தலில் வெற்றிபெற்றதன் மூலம் ஜனநாயக முறைப்படி வெளிப்படுத்தினார்.

அந்த அரசியலமைப்பு சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அது குறித்து ஆராய்வதற்காக அப்போதைய தமிழ் அரசு கட்சியின் செயல்குழுகூடியபோது, அங்கே இருந்த இளைஞர் ஒருவர் அதற்கு எதிராக ஆவேசத்துடன் பேசியதோடு - அதனை கண்டிக்கும் வகையில் தமிழ் அரசு எம். பி. ஒருவர் பதவியை இராஜிநாமா செய்து இடைத் தேர்தலைச் சந்திக்கவேண்டும் என்றும் அது தந்தை செல்வாவாக இருந்தால் நல்லது எனவும் கூறினார். எதுவித தயக்கமும் இன்றி, தந்தை செல்வா தான், தனது பதவியை இராஜிநாமா செய்வதாக அறிவித்தார். அன்று தந்தை செல்வாவை பதவியை இராஜிநாமா செய்யச் சொன்ன அந்த இளைஞர் வேறு யாருமல்லர், தமிழ் அரசின் இன்றைய தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள்தான். இந்தச் சம்பவம் நடந்தபோது தமிழ் அரசுக் கட்சியில் இருந்தவர்கள் யாரும் கட்சியில் இப்போது இல்லை. அதிகம் ஏன் சம்பந்தன்கூட அதற்குப் பின்னரே அரசியலுக்கு வந்தார்.

இன்று தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் மரணித்தவர்களுக்கு அஞ்சலி செய்வதற்குக்கூட, அரசு தடைகளையும் பயமுறுத்தல்களையும் விடுத்து வருகின்ற சூழலில் சம்பந்தன் ஐயா சொல்வது போல, தமிழ் மக்கள் தங்கள் பிரச்னைக்கு தீர்வாக "ஒஸ்லோ அறிக்கை"யைத்தான் இன்றும் வேண்டி நிற்கின்றனர் என்பதை உலகுக்கும் - நாட்டுக்கும் வெளிப்படுத்த, நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்த வேண்டும் என்பதைத் துணிச்சலுடன் சொல்வதற்கோ இன்று கட்சியில் யாரும் இல்லை. அதையும்விட- அப்படியொரு முடிவை எடுக்கவேண்டும் என்பதுடன் சம்பந்தன் ஐயாவே வேட்பாளராகவும் போட்டியிடவேண்டும் என்று ஏன் மாவை சேனாதிராசா அந்தக் கூட்டத்தில் குரல் எழுப்பவில்லை என்பது தெரியவில்லை.

அவரிடமிருந்த "போர்க்குணம்", இப்போது காணாமல் போய்விட்டதா? அல்லது அவரும் யாருக்காவது உறுதியளித்துவிட்டாரா என்பது தெரியவில்லை.

சம்பந்தன் தனது வயது மூப்பின் காரணமாக (சுமந்திரன் சொன்னது போல செயல்படமுடியாத நிலையில் இருப்பதால்) அவ்வாறு போட்டியிடுவதைத் தவிர்த்தால், தானே போட்டியிடுகின்றேன் என்று பழைய மாவை என்றால் சொல்லியிருப்பார். அந்த மாவையைத்தான் தமிழ் மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.!

- ஊர்க்குருவி.

# புத்தளத்தில் வெள்ளம் 8,780 குடும்பங்கள் பாதிப்பு

சிலாபம், மே 21

கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் 8 ஆயிரத்து 780 குடும்பங்களை சேர்ந்த 32 ஆயிரத்து 710 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று புத்தளம் மாவட்ட செயலாளர் எச். எம். எஸ். பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு நாட்களாக பெய்த கடும் மழையால் புத்தளம் மாவட்டத்தில் 9 பிரதேச செயலகப் பிரிவில் 78 கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டனர்.

இதில் புத்தளம் பிரதேச செயலர் பிரிவில் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கு 12 கிராம சேவகர் பிரிவில் 6 ஆயிரத்து 815 குடும்பங்களை சேர்ந்த 25 ஆயிரத்து 529 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், வன்னாத்தவில்லு பிரதேச செயலர் பிரிவில் 4 கிராம சேவகர் பிரிவில் 180 குடும்பங்களை சேர்ந்த 636 பேரும் முந்தல் பிரதேச செயலர் பிரிவில் 20 கிராம சேவகர் பிரிவில் 48 குடும்பங்களை சேர்ந்த 302 பேரும் மஹாகும்புக்கடவல பிரதேச செயலர் பிரிவில் 8 கிராம சேவகர் பிரிவில் 59 குடும்பங்களை சேர்ந்த 187 பேரும் கற்பிட்டி பிரதேச செயலர் பிரிவில் ஒரு கிராம சேவகர் பிரிவில் 76 குடும்பங்களை சேர்ந்த 264 பேரும், கருவலகஸ்வெவ பிரதேச செயலர் பிரிவில் 5 கிராம சேவகர் பிரிவில் 39 குடும்பங்களை சேர்ந்த 109 பேரும், சிலாபம் பிரதேச செயலர் பிரிவில் 10 கிராம சேவகர் பிரிவில் 251 குடும்பங்களை சேர்ந்த 1,059 பேரும், ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலர் பிரிவில் 14 கிராம சேவகர் பிரிவில் 491 குடும்பங்களை சேர்ந்த 1,741 பேரும், மாதம்பை பிரதேச செயலர் பிரிவில் 4 கிராம சேவகர் பிரிவில் 14 குடும்பங்களை சேர்ந்த 143 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வெள்ளத்தால் 9 வீடுகளும், ஒரு வர்த்தக நிலையமும் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மலையகம் 200ஐ பிரதிபலித்து தபால் முத்திரை வெளியீடு

கொழும்பு, மே 21

இந்திய வம்சாவழியினரின் 200 ஆண்டுகால வரலாற்றுப் பின்னணியை வெளிப்படுத்தும் வகையில் தபால் தலை வெளியிடப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் தலைமையில் இந்நிகழ்வு கொழும்பிலுள்ள தாஜ்சமுத்திரா ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வெளியிடப்பட்ட தபால் தலை சிறீ சிறீ ரவி சங்கர், சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோருக்கு வழங்கப்பட்டது. (அ)



# 120 பேரை ரஷ்யாவுக்கு அனுப்பி வைத்தவர் கைது

கொழும்பு, மே 21

சட்டவிரோதமாக சுற்றுலா வீசாவில் சுமார் 120 பேரை ரஷ்யாவுக்கு அனுப்பிய சந்தேகத்தின் பேரில் கொழும்பு - தெகிவளையில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் சந்தேக நபர் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் இன்று முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சிறை அதிகாரிகள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, மே 21

சிறைச்சாலை அதிகாரிகள் சுகயீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள அதிகரிப்பை கோரி சிறைச்சாலை அதிகாரிகள் இந்த சுகயீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 21

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 01.06.2024 சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை நடைபெறும் இவ்வகுப்புக்களில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
21.05.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், வைகாசி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வரலாற்று தவறிழைக்க வேண்டாம்

இலங்கை தமிழ் அரசு கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் யோசனையை நிராகரிக்காமல் நிராகரித்திருக்கின்றது. அதாவது, அவசரப்படுவதில்லை - ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கை வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்த பின்னர்தான் இறுதி முடிவை எடுக்க வேண்டும். அவ்வாறாயின், இறுதி நேரத்தில்தான் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடு வெளியாகும். இதன் மூலம் மறைமுகமாக தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கப் போவதில்லை என்னும் முடிவையே தமிழ் அரசு கட்சி எடுத்திருக்கின்றது. இதன் மூலம் வழமைபோல், தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு வாக்களித்து தமிழ் மக்கள் மீண்டும் ஏமாந்து போக வேண்டும் என்பதுதான் தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடா?

யுத்தத்துக்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியலுக்கு சம்பந்தனே தலைமை தாங்கியிருந்தார். இந்தக் காலத்தில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் பெயரால் பலவாறான முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தன. அந்த முடிவுகள் எவற்றிலும் சம்பந்தன் வெற்றி பெறவில்லை. இந்தக் காலத்தில், மூன்று ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் வாக்களித்து ஏமாந்து போயிருக்கின்றனர். இந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களில் 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின்போதுதான் தமிழ் மக்களின் வாக்குகள் ஆட்சியை மாற்றுவதற்கு பயன்பட்டிருந்தன. ஆனாலும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் ஓர் அடி கூட முன்னேற முடியவில்லை.

புதிய அரசியல் யாப்பு என்னும் மாய மானை காண்பித்து - அதன் பின்னால் தமிழ் மக்களை ஓடுமாறு சம்பந்தனும் அவரின் சீடர்களதும் பணித்திருந்தனர். "ஏக்கிய ராஜ்ய" என்னும் சொல்லுக்குள் சமஷ்டி ஒளிந்திருப்பதாகக் கூறப்பட்டது. வழமைபோல் மக்களும் நம்பினர் - ஏமாந்தனர். எந்தளவுக்கு தமிழ் மக்களை முட்டாள்களாக்க முடியுமோ அந்தளவுக்கு முட்டாளாக்கும் வேலைகளையே சம்பந்தனும் அவரின் சீடர்களும் மேற்கொண்டனர்.

அரசமைப்பில் இருக்கும் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் முயற்சிகளைக் கூட சம்பந்தன் மேற்கொள்ளவில்லை. ஆனால், தன்னுடைய சுயநலன்களுக்காக அன்றைய வாய்ப்புகளை எந்தளவு பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்தளவுக்கு சம்பந்தன் பயன்படுத்திக் கொண்டார். இந்தக் காலத்தில், எதிர்கட்சித் தலைவராக இருந்தமை சம்பந்தன் தமிழ் மக்களின் தலைவராகவும் இருக்கவில்லை. அதேவேளை, இலங்கைக்கான எதிர்கட்சித் தலைவராகவும் இருக்கவில்லை.

சம்பந்தனின் அனைத்துத் தவறுகளுக்கும் வெள்ளையடிக்கும் கட்சியாகவே தமிழ் அரசு கட்சி இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயரில் விடயங்கள் இடம்பெற்றாலும்கூட, கடந்த பதினைந்து வருடகால அரசியல் தீர்மானங்கள் அனைத்துக்கும் தமிழ் அரசு கட்சியே பொறுப்பு. ஏனைய பங்காளிக் கட்சிகளின் கருத்துகள் - முடிவுகளை தமிழ் அரசு கட்சி ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. இதனால், அவர்கள்மீது அதிக குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது. எனினும், அவர்களுக்கும் கூட்டுப் பொறுப்பிருந்தது.

ஒவ்வொரு தோல்வியிலிருந்தும் கற்றுக்கொள்வதன் மூலம் மட்டுமே ஒரு சமூகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியும். கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்ள மறுப்பவர்களால் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் என்று கூறிக்கொள்ளும் மக்களுக்கு எந்தவொரு நன்மையையும் செய்ய முடியாது. கடந்த பதினைந்து வருடங்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

உண்மையில், தமிழ் மக்கள் சார்பில் தீர்மானம் எடுக்கும் எந்தவொரு தகுதிநிலையும் சம்பந்தனுக்கு இல்லை. ஏனெனில், சம்பந்தனதும் அவரின் சீடர்களதும் - முக்கியமாக எம். ஏ. சுமந்திரனின் அனைத்து அரசியல் நகர்வுகளும் தோற்றுவிட்டன. விடுதலைப் புலிக்கம் இயக்கம் தோல்வியடைந்ததால் அவர்கள்மீது எவரும் குற்றஞ்சாட்டுவதில்லை என்று கூறுவது கடந்தகாலம் தொடர்பான அறிவின்மையின் வெளிப்பாடாகும். விடுதலைப் புலிகள் இயக்கம் தங்களின் கொள்கைக்காக உயிர்களை தியாகம் செய்த - செய்யத் தயராக இருந்த ஓர் இயக்கம். பாராளுமன்ற கதிரை ஒன்றை மட்டுமே இலக்கு வைத்து சிந்திக்கும் தரப்பினர் - தங்களை விடுதலைப் புலிகளோடு ஒப்பிடுவது அறியாமையாகும். விடுதலைப் புலிகள் இயக்கம் அதன் அனைத்துத் தீர்மானங்களையும் அதன் பலத்திலிருந்தே தீர்மானித்திருந்தது. ஆனால், இன்று ஒன்றை ஆதரிப்பதற்கும் நிராகரிப்பதற்கும் தமிழ் அரசு கட்சியிடம் என்ன பலம் உண்டு? இதனை கருத்தில் கொண்டுதான், தமிழ்த் தேசிய அரசியலை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் ஒரு கூட்டு முயற்சியாகவே தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை நோக்க வேண்டும். தமிழ் அரசு கட்சியினர் தங்களை திருத்திக்கொள்ள காலம் இப்போதும் உண்டு.

# சிவில் சமூக அமைப்புகளின் உதாரணத்தை அரசாங்கம் பின்பற்றவேண்டியது அவசியம்

ஸ்ரீ லංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

பதினைந்து வருடங்களுக்கு முன்னர் உள்நாட்டுப்போரின் இறுதியில் உயிரிழந்த சகல தரப்பு மக்களினதும் நினைவாக கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் " திருப்புமுனை " என்ற தலைப்பில் நிகழ்வு நடைபெற்றது. இது மூன்று தசாப்தகாலப் போரின் காயங்கள் குணப்பட ஆரம்பிக்கின்றன என்பதன் ஒரு அறிகுறியாகும். மதங்களுக்கு இடையிலான குழுக்கள், புலம்பெயர்ந்த சமூகத்தைச் சேர்ந்த அமைப்புகள் மற்றும் பல்வேறு அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவனங்களை உள்ளடக்கிய சிவில் சமூகக் கூட்டமைப்பு ஒன்றே இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

தர்மசக்தி இயக்கம், ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகளுக்கான நிறுவனம், பௌத்த இளைஞர் சங்கம், சிறந்த இலங்கைக்கான மகாசங்கம் மற்றும உலகத் தமிழர் பேரவை ஆகிய அமைப்புக்கள் வகித்த தலைமைத்துவப் பாத்திரத்தை தேசிய சமாதானப் பேரவை மெச்சுகிறது. திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சகல இனங்களையும் மதங்களையும் சேர்ந்தவர்களும் மதகுருமாரும் அரசியல்வாதிகளும் கலந்துகொண்டனர். போரின் போது உயிரிழந்த பாதுகாப்பு படைகளைச் சேர்ந்தவர்கள் உட்பட சகல உயிர்களின் மீதுமான பொது அக்கறையைப் பிரதிபலிப்பவையாக அங்கு வைக்கப்பட்டிருந்த படங்களும் நிகழ்த்தப்பட்ட உரைகளும் அமைந்திருந்தன.

ஆனால், மே 18 திகதி வடக்கிலும் கிழக்கிலும் துக்கதினமாக அனுஷ்டிக்கப்பட்டமையும் மே 19 ஆம் திகதியை அரசாங்கம் வெற்றித் தினமாக அனுஷ்டித்து பாதுகாப்பு படைகளைச் சேர்ந்தவர்களுக்கு பதவியுயர்வுகளை வழங்கியமையும் நினைவுகூரல் விவகாரத்தில் தொடருகின்ற துருவமயத்தை வெளிக்காட்டுவதாக அமைந்தது. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. போர் முடிவுக்கு வந்த பிறகு எப்போதுமே செய்யப்பட்டதைப் போன்று வடக்கிலும் கிழக்கிலும் நினைவு கூரல் நிகழ்வுகளுக்கு முன்னதாக பாதுகாப்பு படைகளின் பிரசன்னம் கடுமையாக பலப்படுத்தப்பட்டிருந்தது.

மே 18 ஆம் திகதியை அல்லது அந்த வாரம் முழுவதையும் துக்க காலப்பகுதியாக அனுஷ்டிக்க விரும்பியவர்களை கொடுமைப்படுத்தி கைதுசெய்த பொலிசாரின் நடவடிக்கையை தேசிய சமாதானப் பேரவை மிகவும் கடுமையாகக் கண்டனம் செய்கிறது. போரில் உயிரிழந்தவர்கள் எந்த தரப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சகலரும் இலங்கையர்களே. கடந்த வாரம் நடந்ததைப் போன்று உயிரிழந்த தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூர முயற்சித்தமைக்காக ஆண்களையும் பெண்களையும் பாதுகாப்பு படைகளைச் சேர்ந்தவர்கள் அவர்களது வீடுகளில் இருந்து இழுத்துச் சென்று கைதுசெய்வது அல்ல தேசிய நல்லிணக்கத்துக்கான பாதை.

நீதி இல்லை என்றால் நல்லிணக்கச் செயன்முறை என்று ஒன்று இருக்கமுடியாது. போரில் உயிரழந்தவரகளை நினைவுகூருவதற்கு மக்களுக்கு சகல உரிமைகளும் இருக்கின்றன. உண்மையில் இழப்பீட்டு சட்டத்தில் அதற்கான ஏற்பாடு இருக்கிறது. பயனுறுதியுடைய பரிகாரம் ஒன்றைக் காண்பதற்கான உரிமையை அங்கீகரித்தல், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு பயனளிக்கக்கூடிய செயற்பாடுகளை முன்னெடுத்தல், உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு அஞ்சலி செய்வதற்கு நினைவிடங்களை நிர்மாணித்தல் உட்பட அஞ்சலி செய்வதற்கு வழிவகை செய்தல் போன்ற நடவடிக்கைகளே கூட்டு இழப்பீடுகளாக அமைவதாக இழப்பீட்டு சட்டத்தின் 27 வது பிரிவு கூறுகிறது.

நல்லிணக்கம் ஏற்படவேண்டுமானால், போரில் உயிரிழந்த சகலரையும் நினைவுகூருவதற்கு சிவில் சமூக அமைப்புக்கள் காட்டிய உதாரணத்தைப் பின்பற்றி சட்டத்தைப் பேணுவதே அரசாங்கம் செய்யவேண்டிய காரியமாகும்.

## பாராளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் தரமற்ற உணவு வகை

கொழும்பு, மே. 21

பாராளுமன்றத்தின் சிற்றுண்டிச்சாலையில் வழங்கப்படும் உணவு தரமற்றதாக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் புகார் அளித்துள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த 10ஆம் திகதி நடந்த பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே அவர்கள் இந்த முறைப்பாட்டைத் தெரிவித்தனர்.


மேலும், கட்டணம் வசூலிக்கப்படும் தொகைக்கு அல்லது போதுமான அளவு உணவை உண்ணக்கூடிய வகையில் வழங்கவும் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, சுமார் இருபது பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் சிறிது காலமாக உணவு உண்பதைத் தவிர்த்து வருவதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, உணவு மற்றும் பானங்களுக்காக வருடாந்தம் சுமார் பன்னிரெண்டு கோடி ரூபாவை பாராளுமன்றம் செலவிடுவதாக பாராளுமன்ற நிதி அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 21 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 08
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : திரையோதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மனநிறைவு பெறும் நாள்.

**மிதுனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் விலகும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்பிற்கு தகுந்த அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். விட்டு கொடுத்து போக வேண்டிய நாள்.

**துலாம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். பணிகளை போராடிமுடிப்பீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**தனுசு**
மற்றவர்களால் செய்யமுடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். சாதித்துக் காட்டும் நாள்.

**மகரம்**
உற்சாகமடைவீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பாராத நன்மைகள் கிட்டும் நாள்.

# முற்போக்கு இந்தியாவைப் படைப்போம்

## முதலமைச்சர் ஸ்டாலின் அழைப்பு

சென்னை, மே 21

முற்போக்கு இந்தியாவைப் படைப்போம் என்று தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அயோத்திதாசப் பண்டிதர் பிறந்த நாளையொட்டி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



தமிழன், திராவிடன் என்ற இரு சொற்களையும் அரசியல் அடையாளச் சொற்களாக மாற்றிய திராவிடப்பேரொளி அயோத்திதாசப் பண்டிதரின் பிறந்தநாளில் சமத்துவத்தை நோக்கிய நமது பாதையில் திடமாக நடைபோட உறுதியேற்போம்! முற்போக்கு இந்தியாவைப் படைப்போம்!- என்று பதிவிட்டுள்ளார். (எ)

# போதைப்பொருள் பாவனையை அடியோடு அழித்தல் வேண்டும்

## தினகரன் வலியுறுத்து

சென்னை, மே 21

தமிழகத்தில் போதைப்பொருள் பாவனையை அடியோடு அழிக்க வேண்டும் என்று அ. ம. மு. க. பொதுச்செயலாளர் ரி. ரி. வி. தினகரன் வலியுறுத்தினார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு, தலைநகர் சென்னையில் தொடங்கி மாநிலத்தின் மூலை முடுக்குகளெங்கும் தாராளமாக கிடைக்கும் கொடிய வகை போதைப் பொருள்களுக்கு இளைஞர்களும், கல்லூரி மாணவர்களும் அடிமையாகி வருவது மிகுந்த கவலையையும் வேதனையையும் அளிக்கிறது.

வெளிநாட்டிலிருந்து சென்னைக்குக் கடத்தி வரப்பட்ட 22 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல், கோவையில் மருந்து குப்பிக்குள் வைத்து போதை மாத்திரைகள் விற்பனை, கல்லூரி மாண



வர்களை குறிவைத்து விற்கப்படும் போதை ஊசிகள் என போதைப்பொருள்களின் வணிக மையமாக தமிழகத்தை மாற்றிய தி. மு. க. அரசின் அலட்சியப் போக்கு கடும் கண்டனத்துக்குரியது என்று தினகரன் குற்றஞ்சாட்டினார். (எ)

# சிலந்தியாற்றின் குறுக்கே தடுப்பணை கேரளாவை தடுக்க வேண்டும் தமிழகம்

## அரசுக்கு இ. பி. எஸ். ஆலோசனை

கோவை, மே 21

சிலந்தியாற்றின் குறுக்கே கேரள அரசு தடுப்பணை கட்டுவதை தமிழக அரசு சட்டரீதியாகத் தடுக்க வேண்டும் என அ. தி. மு. க. பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான பழனிசாமி தெரிவித்தார்.

கோவையில் உடல்நலக் குறைவால் காலமான அ. தி. மு. க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தா. மலரவன் வீட்டுக்கு நேற்றுக்காலை சென்ற முன்னாள் முதலமைச்சர் பழனிசாமி அஞ்சலி செலுத்தினார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட பழனிசாமி கேரள அரசு இடுக்கி மாவட்டம் பெருகுடா எனும் இடத்தில் சிலந்தியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த அணை



கட்டப்பட்டால் அமராவதி அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்து, அணையை நம்பி இருக்கும் பொதுமக்களும், விவசாயிகளும் கடுமையாகப் பாதிக்கப்படுவர்.

எனவே, சிலந்தி ஆற்றின் குறுக்கே கேரள அரசு தடுப்பணை கட்டுவதைத் தடுக்க தமிழக அரசு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். கர்நாடகா, ஆந்திரா, கேரளா ஆகிய மூன்று மாநிலங்களும் தமிழத்துக்கு வரும் நீரைத் தடுக்கும் வகையில் தடுப்பணைகள் கட்டுவதைத் தடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (எ)

# மதுபானசாலைகளை மூட முதல்வரிடம் முறையிட சென்ற இளைஞரால் பரபரப்பு

சென்னை, மே 21

தன்னைப்போல் யாரும் மதுபாவனைக்கு அடிமையாகி விடக்கூடாது என்பதற்காக, மதுபானசாலைகளை நிரந்தரமாக மூட வேண்டும் என முதல்வரை சந்தித்து வலியுறுத்த முயன்ற இளைஞன் கைது செய்யப்பட்டார்.

தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் சென்னை ஆழ்வார்பேட்டையிலுள்ள சித்தரஞ்சன் சாலைப்பகுதியில் குடும்பத்துடன் வசிக்கிறார். முதல்வர் என்பதால் அவரது வீடு மற்றும் சுற்றியிருக்கும் பகுதிகளில் பாதுகாப்புக்காக பொலிஸார் நிறுத்தப்பட்டிருப்பார்கள்.

இந்நிலையில் இளைஞன் ஒருவர் பொலிஸ் என ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட மோட்டார் சைக்கிளில் முதல்வர் வீடு நோக்கிச் சென்றார். அவர் மதுபோதையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் முதல்வர் வீட்டில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அங்கு வந்த இளைஞனை மறித்து விசாரித்தபோது, அவர் முன்னுக்குப்பின் முரணாகப் பதிலளித்தார். இதையடுத்து, அவரை தேனாம்பேட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அவரிடம் நடத்தப்பட்ட தொடர் விசாரணையில் "மது போதைக்கு நான் அடிமையாகி விட்ட நிலையில், மேலும் என்னைப்போல் வேறு யாரும் அடிமையாகி விடக் கூடாது என்பதற்காக தமிழகத்தில் மதுபானசாலைகள் அனைத்தையும் நிரந்தரமாக மூட வேண்டும் என முதல்வரிடம் நேரில் வலியுறுத்த வந்ததாக பொலிஸாரிடம் அவர் கூறியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கட்சிகளுடன் பேச புதிய கூட்டணி திட்டம்!

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்

கொழும்பு, மே. 21

**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சி உட்பட தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்கு புதிய அரசியல் கூட்டணி தீர்மானித்துள்ளது.**

அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா மற்றும் சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபாலடி சில்வா அணியினர் இணைந்து புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்கவுள்ளனர். இதற்கான பேச்சுகள் வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றன.

'புதிய அரசியல் கூட்டணி' என்ற பெயரிலேயே கூட்டணிக்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் பல தரப்புகளே தற்போது இக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

எனவே, அடுத்து வரும் நாட்களில் தமிழரசுக் கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் என்பவற்றுடன் கூட்டணி பிரமுகர்கள் பேச்சு நடத்தவுள்ளனர்.

அடுத்த ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக இக்கூட்டணி அமைய வேண்டும் என நிமல் சிறிபாலடி சில்வா கருத்து வெளியிட்டுள்ளார். (அ)

# பாராளுமன்றத்தை கலைக்க இரு தரப்பினரும் இணக்கம்!

## கூறுகிறார் உதயங்க வீரதுங்க



கொழும்பு, மே. 21

முக்கியமான சட்டங்களை இயற்றியதன் பின்னர் பாராளுமன்றத்தை கலைக்க இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர் எனவும், எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதிக்குள் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்றும் என மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினரும், ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவருமான உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுபவர் இந்த பாராளுமன்றத்தை நிச்சயம் கலைப்பார். புதிய ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தை கலைப்பதில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது-என்றார். (அ)

# ட்ரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நெற்செய்கை

## 15 மாவட்டங்களில் நடைமுறைக்கு

கொழும்பு, மே. 21

இவ்வருடம் 15 மாவட்டங்களில் ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நெல் வயல்களில் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி அம்பாந்தோட்டை, மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு, பொலனறுவை, அனுராதபுரம், குருநாகல், புத்தளம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, நுரவஎலியா, மாத்தளை, திருகோணமலை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் இம்முறை நெற்செய்கைக்கு ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூச்சிக்கொல்லிகள் தெளிக்கப்பட உள்ளன.

தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள விவசாயிகளின் பொது சேவை நிலையங்களுக்கு தலா ஒரு ஆளில்லா விமானத்தை வழங்க விவசாய தொழில்நுட்ப சபை ஏற்பாடு செய்துள்ளதாக அதன் தலைவர் காவிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (அ)

# இராஜாங்க அமைச்சருக்கு ரூ.300 அனுப்பி வைத்த இளைஞர்கள்!

கொழும்பு, மே. 21

சர்ச்சைகளில் சிக்கும் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவுக்கு கரந்தெனிய இளைஞர்கள் குழுவொன்று தபால் மூலம் 300 ரூபாவை அனுப்பி வைத்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர அண்மையில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு மனைவியை வழியனுப்பச் சென்றபோது, சர்ச்சையில் சிக்கினார். அங்கு பணிபுரியும் ஊழியர் ஒருவரை தாக்கியிருந்தார்.

வெளிநாடு சென்ற அமைச்சரின் மனைவியின் பார்சல்களை சுமந்து செல்வதற்காக 1000 ரூபாவுக்கு பதிலாக 700 ரூபாவையே அவர் வழங்கியிருந்தார். அந்த ஊழியர்களின் குறைந்தபட்ச கட்டணம் ரூ.1000 என அங்கு அறிவித்தல் பலகைகள் உள்ளன.

எஞ்சிய 300 ரூபாவை அந்த ஊழியர் கேட்டபோது, பிரசன்ன ரணவீர அவரை தாக்கினார். இதற்காக அமைச்சர் பின்னர் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டது.

இதையடுத்து, கரந்தெனிய பகுதியை சேர்ந்த இளைஞர்கள் குழுவொன்று, 300 ரூபாவை இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவுக்கு அனுப்பி வைத்துள்ளனர். சுமை தூக்குபவருக்கு செலுத்த வேண்டிய ரூ.300 ஐ கொடுத்து விடுங்கள் என குறிப்பிட்டே, தபால் கட்டளை மூலம் பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# ஏப்ரல் மாதத்தில் உற்பத்தி நடவடிக்கை பின்னடைவு!

கொழும்பு, மே. 21

கடந்த ஏப்ரல் மாதத்தில், நாட்டில் உற்பத்தி நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்தில் 62.05 வீதமாக இருந்த உற்பத்தித் துறையின் இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் கடந்த மாதத்தில் 42 வீதமாக பதிவாகியுள்ளது.

அதன்படி, இந்த மாதத்தில் புதிய முன்பதிவு, உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் மொத்த கொள்முதல் குறியீடுகளில் ஏற்பட்ட சரிவின் விளைவாக ஒட்டுமொத்த சுட்டெண் வீழ்ச்சியடைந்ததாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு விடுமுறைகள் காரணமாக ஏப்ரல் மாதத்தில் பல தொழிற்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டமையே இந்த பின்னடைவுக்கு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட விடுமுறை காரணமாக விநியோகஸ்தர்கள் முன்பதிவை வழங்குவதற்கு எடுத்துக்கொண்ட நேரம் முன்னையதை விட ஏப்ரலில் வேகமாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சேவைத் துறையில், இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் 56.7 வீத மெதுவான வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

மார்ச் மாதத்தில் கொள்கை வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டதன் மூலம், நிதிச் சேவைகள் துணைத் துறையின் வணிக நடவடிக்கைகள் மேலும் வளர்ச்சியடைந்துள்ளதுடன், பண்டிகைக் காலத்தின் தேவைக்கு மத்தியில் மொத்த மற்றும் சில்லறை வர்த்தக உப பிரிவின் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், நிகழ்ச்சிகள் மற்றும் ஒளிபரப்பு, தொலைத்தொடர்பு மற்றும் சொத்து விற்பனை ஆகிய துணைத் துறைகளும் ஏப்ரல் மாதத்தில் சாதகமான முன்னேற்றங்களை பதிவு செய்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மார்ச் மாதத்துடன் ஒப்பிடும் போது ஏப்ரல் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளமைக்கு அமைய தங்குமிடம் மற்றும் உணவு விநியோக சேவையின் உப பிரிவானது சிறிதளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# தமிழ் முற்போக்குக் கூட்டணி ஒருபோதும் அரசுடன் சேராது!

கொழும்பு, மே. 21

தமிழ் முற்போக்கு கூட்டணி அரசுடன் இணையாது என்று அக்கூட்டணியின் பிரதித் தலைவரும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலின்போது சிறுபான்மையினக் கட்சிகள் சஜித்துக்கே ஆதரவு வழங்கும் என்றும், சஜித்தே அத்தேர்தலில் வெற்றி பெறுவார் எனவும் பழனி திகாம்பரம் கூறினார்.

"ரணிலும், சஜித்தும் இணைய வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள ஓரிருவர் கூறுகின்றனர். அவர்கள் அவ்வாறு கூறினாலும் கட்சியை விட்டு செல்லமாட்டார்கள். எனினும், பலர் ஐதேக பக்கம் செல்லவுள்ளனர் என போலி தகவல்கள் பரப்பப்படுகின்றன.

நானோ, மனோ கணேசனோ அல்லது இராதாகிருஷ்ணனோ அரசு பக்கம் செல்லமாட்டோம். ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் உள்ளிட்டவர்களும் செல்ல மாட்டார்கள்." - எனவும் திகாம்பரம் குறிப்பிட்டார். (அ)

# பல மாகாணங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, மே. 21

கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கையை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

இதன்படி குறித்த அறிவிப்பு மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களுக்கும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தென்மேற்கு பருவப்பெயர்ச்சி நிலை படிப்படியாக நிலைபெற்று வருவதால், தற்போதைய மழை மற்றும் காற்றின் நிலையை எதிர்பார்க்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என்பதால் இந்த அறிவித்தல் விடுத்துள்ளது.

மேலும் சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# இந்தியக் கடற்பரப்பில் 7 இலங்கை மீனவர் கைது!

சென்னை, மே 21

இந்திய கடற்படரப்பில் மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இயந்திர படகு ஒன்றுடன் இலங்கையர் ஏழு பேரை இந்திய கரையோர காவல்படை கைது செய்துள்ளது.

கன்னியாகுமாரி கடற்பரப்பில் நேற்று முன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறையை சேர்ந்த 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விசாரா ஊழியர் போராட்டம் காரணமாக

# பல்கலைகளுக்கு புதிய மாணவரை அனுமதிப்பதில் பெரும் சிக்கல்நிலை

கொழும்பு, மே. 21

**பல்கலைக்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க போராட்டத்தினால்பல்கலைக்கழகங்களுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இரண்டு வார காலப் பகுதியில் வெளியிடப்படவுள்ள நிலையில் பல்கலைக்கழக அனுமதி குறித்த மாணவர் கையேடு இன்னமும் வெளியிடப்படவில்லை யென தெரிவிக்கப்படுகிறது.

தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக இவ்வாறு மாணவர் கையேடு வெளியிடுவது கால தாமதமாகியுள்ளதோடு, கையேட்டை வெளியிடாது மாணவர்களை அனுமதிப்பது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என கூறப்படுகின்றது.

மேலும், கையேட்டை அச்சிட்டு வெளியிடுவதற்கு குறைந்தபட்சம் ஒரு மாத கால அவகாசம் தேவை என குறிப்பிடப்படுகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களின் பரீட்சைகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இரத்தினபுரியில் ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் மரணம்!

கொழும்பு, மே. 21

இரத்தினபுரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொடம்பே பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி, தொடம்பே பகுதியைச் சேர்ந்த 32 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவருக்கும் அவரது உறவினரொருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் சந்தேக நபரான உறவினரால் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரது சடலம் இரத்தினபுரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஈரான் ஜனாதிபதி மறைவு; ஜனாதிபதி ரணில் இரங்கல்

கொழும்பு, மே. 21

ஈரான் நாட்டு ஜனாதிபதி சையத் இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

எக்ஸ் தளத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள இரங்கலில்,

ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, வெளிவிவகார அமைச்சர் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் பல மூத்த ஈரானிய அதிகாரிகளின் துயர மரணத்தால் இலங்கை ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளது.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், அரசுக்கும், ஈரான் மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் மறைந்த ஈரான் ஜனாதிபதி ரைசியின் குடும்பத்தினருடனும் அன்புக்குரியவர்களுடனும், உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதிஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு ஈரானின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட உமா ஓயா பலநோக்குத் திட்டத்தை மக்கள் பாவனைக்காக கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மழை தொடரும்!

கொழும்பு, மே. 21

தென்மேற்கு பருவமழை படிப்படியாக நாடு முழுவதும் நிலைபெற்று வருவதால், தற்போது நிலவும் மழை மற்றும் காற்றின் நிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மேகமூட்டமான வானம் காணப்படும் என அந்த திணைக்களம் விடுத்துள்ள புதிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பரவலாக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ, வடமேற்கு மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நாட்டின் ஊடாக இடைக்கிடையில் மணித்தியாலத்திற்கு 30-40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை, அறிவுறுத்தியுள்ளது. (அ)

# ஞானசார தேரருக்கு மன்னிப்பு வேண்டும்

பௌத்த தலைவர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, மே. 21

வெசாக் தினத்தை முன்னிட்டு பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க வேண்டும் என பௌத்த மதத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தேசிய ஐக்கியம் சமூக ஆதரவு ஆகியவற்றை ஊக்குவிப்பதில் ஞானசார தேரர் வழங்கிய பங்களிப்பை கருத்தில் கொண்டு மன்னிப்பு வழங்கவேண்டும் என பௌத்தபீடங்களின் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதியுள்ள பௌத்த மதத் தலைவர்கள், மார்ச்28 ஆம் திகதி ஞானசார தேரருக்கு நான்கு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளனர்.

சமூகத்தில் தீவிரவாத சக்திகளின்செயற்பாடுகள் குறித்து எச்சரிக்கும் நடவடிக்கையில் ஞானசார தேரர் ஈடுபட்டுள்ளார் என சுட்டிக்காட்டியுள்ள பௌத்த மதத் தலைவர்கள், பாதுகாப்பு படையினருக்கு ஆதரவளித்தார். இலங்கையில் சில தீவிரவாத சக்திகள் தங்கள் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதை தடுக்க உதவினார் இதன் காரணமாக தீவிரவாதிகள் தொடர்பான பல சம்பவங்கள் தடுக்கப்பட்டன எனவும் தெரிவித்துள்ளனர். (அ)

# ஈரான் ஜனாதிபதி உயிரிழப்பு; நாமல் ராஜபக்ஷவும் இரங்கல்

கொழும்பு, மே. 21

ஹெலிகாப்டர் விபத்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உயிரிழந்துள்ள நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச இரங்கல் வெளியிட்டுள்ளார்.

இது குறித்த தனது எக்ஸ் பக்கத்தில் விடுத்துள்ள பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"ஈரான் ஜனாதிபதியின் மரணம் குறித்த துயரச் செய்தி ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது தலைமை ஈரானின் அரசியலில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது.

மேலும், அவரது சமீபத்திய இலங்கை விஜயம் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தியது. இந்த கடினமான நேரத்தில் எனது எண்ணங்கள் அவரது குடும்பத்தினருடனும் ஈரான் மக்களுடனும் இருக்கின்றது" என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்டவர்கள் பயணித்த ஹெலிகாப்டர் அஜர்பைஜான் தேசத்தின் எல்லையில் உள்ள ஜோல்பா என்ற நகருக்கு அருகில் விபத்துக்குள்ளானது.

அதில் அனைவரும் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 50 ரூபாவால் குறைவடைந்துள்ள பெரிய வெங்காயத்தின் விலை!

கொழும்பு, மே. 21

சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 50 ரூபாயினால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு இந்தியா விதித்த கட்டுப்பாட்டுடன் பெரிய வெங்காயத்தின் விலை கிலோவுக்கு 700 ரூபாயாக அதிகரித்ததன் காரணமாக சீனாவில் இருந்தும் பெரிய வெங்காயத்தை அரசாங்கம் இறக்குமதி செய்தது.

இந்த நிலையில், தற்போது சந்தையில் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 50 ரூபாயினால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வெங்காய இறக்குமதியாளர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பெரிய வெங்காயத்தின் ஏற்றுமதி வரம்பை இந்தியா நீக்கியதால், அதிக அளவில் பெரிய வெங்காயம் சந்தைக்கு வந்துள்ளதாக அத்தியாவசிய உணவுகள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கை வருகிறார் எலான் மஸ்க்

கொழும்பு, மே. 21

செல்வந்த வர்த்தகரான எலான் மஸ்க், இந்த ஆண்டு இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

இந்தோனேஷியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எலான் மஸ்க்ஸை நேற்று முன் தினம் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இலங்கையில் ஸ்டார்லிங்க் இணைய வசதி சேவையை ஆரம்பிக்க முதலீடு செய்யுமாறு ஜனாதிபதி, எலான் மஸ்கிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கோரிக்கையை எலான் மஸ்க் ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ஸ்டார்லிங்க் செய்மதி இணைய வசதி சேவையை ஆரம்பிக்க எலான் மஸ்க் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

எனினும், எலான் மஸ்க் இலங்கைக்கு விஜயம் செய்யும் திகதி இதுவரை உறுதிப்படுத்தப்படாத நிலையில், அது தொடர்பில் எலான் மஸ்க் தரப்புடன் இலங்கை அதிகாரிகள் தொடர்புகளை பேணி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஆறுகளின் நீர்மட்டம் உயர்வு!

கொழும்பு, மே. 21

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அத்தனுகல்லு ஓயா, களுகங்கை ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்காரணமாக குறித்த நீர்நிலைகளை அண்டிய தாழ் நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள் வெள்ளம் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஜூன் முதல் பிரமாண்டமான கூட்டங்கள்!

## பிரதான அரசியல் கட்சிகள் திட்டம்

கொழும்பு, மே. 21

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஆரம்பகட்ட கூட்டங்களை எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மிகவும் பிரமாண்டமாக நடத்துவதற்குப் பிரதான அரசியல் கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் பிரதான அரசியல் கட்சிகள் பிரமாண்டமாக நடத்தி இருந்தன. பெருமளவான மக்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்த பிரசாரக் கூட்டங்கள் ஜூன் மாதம் முதல் நடத்தப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கும் மக்கள் சந்திப்பு, ஜூன் 8 ஆம் திகதி மாத்தறையில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்குரிய உத்தியோகபூர்வ பிரசாரக் கூட்டமாக இது அமையும் எனக் கருதப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பனவும் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன. (அ)

# துப்பாக்கிதாரி கைது

கொழும்பு, மே. 21

ஹொரணை, கிரேஸ்லேன் வத்தை பிரதேசத்தில் கடந்த 5 ஆம் திகதி வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொட்டாவ பிரதேசத்தில் உள்ள வாடகை வீடொன்றில் தற்காலிகமாகத் தங்கியிருந்த 31 வயதுடைய இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தற்காலிகமாகத் தங்கியிருந்த வாடகை வீட்டிலிருந்து மற்றுமொரு பிரதேசத்திற்குச் செல்ல முற்படும்போதே கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# முன்னாள் ஜனாதிபதிகளின் சம்பளத்தை விமர்சிக்கும் அநுர



கொழும்பு, மே. 21

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சம்பளம் வழங்க மாத்திரம் 10 இலட்சத்து 120 ரூபாயை விட அதிக தொகையை செலவிடும் இலங்கை, பொது மக்களில் தற்போது 68 வீதமானவர்களின் பசியை போக்க முடியாத சூழலில் உள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க விமர்சித்துள்ளார்.

அதன்படி, இலங்கையில் 68 வீதமானவர்கள் இரு வேளை உணவு அல்லது போசாக்கற்ற மூன்று வேளை மற்றும் ஒரு வேளை உணவுக்கு பழக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் மத்திய வங்கி அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க மூலம் 10 கிலோ அரிசியை 34 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கி வரும் நிலையில் இதன் மூலம் நாட்டில் மக்கள் தொகையில் 50 வீதமானவர்கள் தங்களுடைய வாழ்க்கையை சரி செய்துக் கொள்ள முடியாத குழியில் விழுந்துள்ளதாக தெரிய வருகிறது என அவர் தெரிவித்தார். (அ)

# சகோதரியின் பெயரில் டென்மார்க் சென்று பிரஜாவுரிமை பெற்ற பெண் யாழில் கைது!

யாழ்ப்பாணம், மே. 21

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தனது சகோதரியின் பெயரில் கடவுச்சீட்டு மற்றும் வங்கி ஆவணங்களைப் போலியாக பெற்ற குற்றச்சாட்டில் டென்மார்க் பிரஜையை யாழ்ப்பாண பொலிஸார் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்டு தற்போது டென்மார்க் பிராஜவுரிமை பெற்று டென்மார்க்கில் வசிக்கும் 42 வயதுடைய பெண்ணொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கடந்த 2015ஆம் ஆண்டளவில் தனது சகோதரியின் பெயரில் போலியான கடவுச்சீட்டை பெற்று டென்மார்க் நாட்டுக்கு சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வசித்த அவரது சகோதரி 2019ஆம் ஆண்டளவில் தனக்கு கடவுச்சீட்டு எடுப்பதற்காக விண்ணப்பித்தபோது அவரது பெயரில் ஏற்கனவே கடவுச்சீட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, அவருக்கு கடவுச்சீட்டு வழங்கப்படவில்லை. அதன் போதே தனது சகோதரி தனது பெயரில் கடவுச்சீட்டு எடுத்து வெளிநாடு சென்ற விடயம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தனது தாயாரின் இறுதிக் கிரியைக்காக டென்மார்க்கில் இருந்து வந்தவர், போலியான கடவுச்சீட்டை பயன்படுத்தி தனது சகோதரியின் பெயரில் யாழ்ப்பாணத்தில் வங்கிக் கணக்கொன்றினையும் ஆரம்பித்துள்ளார்.

இது தொடர்பில் அறிந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சகோதரி யாழ்ப்பாண பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், டென்மார்க் பிரஜையான பெண்ணை கைது செய்து, விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய ஊழியர்களில் 650 பேர் வேலை இழக்கும் அபாயம்!

கொழும்பு, மே. 21

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பணியாற்றும் 650 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளமையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தற்போதுள்ள ஊழியர்களில் 200 பேரை அரச நிறுவனங்களில் பணியமர்த்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுத்திகரிப்பு நிலையத்தின் பழைய உள்கட்டமைப்பை நவீனப்படுத்தவும் மேம்படுத்தவும் தற்போதுள்ள முதலீட்டுத் தேவையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் இன்னும் 25 ஆண்டுகளுக்கு சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாட்டு திறன் மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதே நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை திருகோணமலைக்கு மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கன மழை காரணமாக கொழும்பில் வெள்ளம்!

கொழும்பு, மே. 21

நாட்டில் பெய்து வரும் கன மழை காரணமாக கொழும்பில் பல வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

காலிமுகத்திடல், கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, கொம்பனி தெரு, மருதானை, புரஹல, ராஜகிரிய, பத்தரமுல்லை, நுகேகொடை, கிருலப்பனை, பேலியகொடை ஆகிய பிரதேசங்களில் பல வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

பேஸ்லைன் வீதியின் போக்குவரத்து நெரிசலுடன் கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக வீதியின் பேலியகொட வெளியேறும் பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதையடுத்து வாகனம் ஓட்டும் போது மிகவும் அவதானமாக இருக்குமாறு சாரதிகளை பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

# மதுபானசாலைக்கு எதிராக நானாட்டானில் போராட்டம்

மன்னார், மே. 21

நானாட்டான் நகர பகுதிக்குள் எந்த ஒரு மதுபானசாலைக்கும் அனுமதி வழங்க வேண்டாம் என கோரிக்கை விடுத்து நேற்று மதத் தலைவர்கள், பொதுமக்கள் இணைந்து நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நானாட்டான் விவசாய அமைப்பு பிரதிநிதிகள், மகளிர் அமைப்புகள்,அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து நானாட்டான் சுற்றுவட்டத்தில் இருந்து நானாட்டான் பிரதேச செயலகம் வரை கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நானாட்டானில் இந்து மற்றும் கத்தோலிக்க பாடசாலைகள் அமைந்துள்ள பகுதியில் மென் மதுபான விற்பனை நிலையம் காணப்படும் அதே நேரம், மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் கள்ளுத்தவறணை காணப்படுவதாகவும், மென் மதுபான சாலையை உடனடியாக நிறுத்தும் படியும், அதே நேரம் நானாட்டான் ஒலுமடு பகுதியில் அமைந்துள்ள கள்ளுத்தவறணையை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யுமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மதுப்பாவனையை ஊக்கப்படுத்துபவர்களே மக்களையும் மாணவர்களையும் வாழவைக்க உதவிடுங்கள், எமக்கு கிடைத்த சாபம் மதுக்கடை அதை இன்றே ஒழிப்போம், உழைப்பை பறிக்க வந்த சாத்தான் இந்த மதுபானமும் மதுக்கடையும், குடி சிலரின் இன்பம் பலரின் துன்பம், மது விற்று கிடைக்கும் காசு உனக்கே நீ தேடும் சாபம் போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு நானாட்டான் பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



குறித்த போராட்டத்தில் அருட்தந்தையர்கள், இந்து ஆலய குருக்கள், முருகன் விகாராதிபதி, முன்னாள் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள்,மாதர் சங்க உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த போராட்டத்தின் இறுதியில் பாடசாலைக்கு அருகில் இயங்கி வரும் மென் மதுபானசாலைக்கான அனுமதியை உடனடியாக நிறுத்த கோரியும் ஒலுமடு பகுதியில் இயங்கிவரும் கள்ளுத் தவறணையை இடம்மாற்றி தர வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் மன்னார் மாவட்ட செயலாளருக்கு கையளிப்பதற்கான மகஜர் நானாட்டான் பிரதேச செயலாளர் திருமதி சிவசம்பு கனகம்பிகையிடம் கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு ஐஸ் விற்று வந்தவர் கைது!

அம்பாறை, மே. 21

**மாணவர்களுக்கு ஐஸ் போதைப் பொருட்களை சூட்சுமமாக விற்பனை செய்து வந்த 24 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் பெரிய நீலாவணை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நகர் புறத்தில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய சந்தேக நபர் ஒருவர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் பெரிய நீலாவணை பொலிஸார் பரிசோதனை மேற்கொண்டனர்.

இதன் போது குறித்த சந்தேக நபர் வசம் இருந்து 2 கிராம் 360 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது. குறித்த சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க வழிநடத்தலில் சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)



## அம்மனுக்கு மடிப்பிச்சை

காரைதீவு, மே. 21

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசி திருக்குளிர்த்தி சடங்கை ஒட்டிய மடிப்பிச்சை எடுக்கும் சடங்கு நேற்று திங்கட்கிழமை காலை வரலாறு காணாத அளவுக்கு பெண்கள் அதிகமாக கலந்து கொண்டு மடிப்பிச்சை எடுத்தனர்.

(அ)

## கண்ணகித்தாயின் வைகாசி சடங்கில் நேற்று அதிகாலை முதல் நேர்த்திக்கடன்

### இன்று காலை திருக்குளிர்த்தி



காரைதீவு, மே. 21

கிழக்கில் கண்ணகித்தாயின் வைகாசி திருக்குளிர்த்தி சடங்கின் போது பக்தர்கள் அதிகாலை முதல் கற்பூரச்சட்டி ஏந்தி பய பக்தியுடன் நேர்த்திக்கடன் செலுத்தி வருகின்றனர்.

அதேவேளை ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயவருடாந்த வைகாசித் திங்கள் திருக்குளிர்த்தி பாடும் முக்கிய சடங்கு இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம் பெறும்.

எட்டாம் சடங்கு எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை இடம் பெறும்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் பண்டைய கலாசார பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## ஒந்தாச்சிமடம் மாணவர்களுக்கு அவுஸ்திரேலியாவிலிருந்து உதவி

காரைதீவு, மே. 21

அவுஸ்திரேலியாவில் வாழும் ஒந்தாச்சிமடம் பழைய மாணவர்களால் ஒந்தாச்சிமடம் விநாயகர் மகா வித்தியாலயத்தில் பயிலும் சகல மாணவர்களுக்கும் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் திருமதி மதிவதனி பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதிகளாக பட்டிருப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி. துவிதரன் சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நன்கொடை அதிதியாக நன்கொடையாளர் சார்பாக அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த பிரபல சமூக சேவையாளர் பழைய மாணவர் ரி.சௌந்தரராஜன் திருமதி றோஜினி சௌந்தரராஜன் கலந்து சிறப்பித்தனர்.



கௌரவ அதிதிகளாக பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி அ.சற்குணராஜா, மற்றும் ஆசிரியர் முத்தையா ஜெயாதி ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

உதவி வழங்கிய அதிதிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு இடம்பெற்றது.

சாதனை படைத்த மாணவர்களுக்கு விசேட பரிசுப்பொதிகள் வழங்கப்பட்டன.

அவுஸ்திரேலியாவிலிருந்து பத்து பழைய மாணவர்கள் இந்த கல்வி ஊக்குவிப்பு உதவித் திட்டத்திற்கு ஒன்பது லட்ச ரூபாய் நிதியுதவி வழங்கியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


(அ)

## கோடி ரூபா பெறுமதியான நீல தூணா மீன் சிக்கியது!

காரைதீவு, மே. 21

காரைதீவு பகுதியில் இருந்து ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களின் தூண்டிலில் சுமார் கோடிக்கணக்கான பெறுமதியானது என நம்பப்படும் நீல தூணா என அழைக்கப்படும் பாரிய மீன் சிக்கியுள்ளது.

பெரிய கண் மற்றும் நீல நிற வர்ணங்களை கொண்டுள்ள 49



கிலோ நிறையுடைய குறித்த மீனை விற்பதற்கான முயற்சியில் மீனவர்கள் இறங்கியுள்ளனர்.

குறித்த மீன் இனங்கள் 7 வகைகளாக பிரிக்கப்படுவதாகவும் யாவும் பெறுமதி மிக்கது எனவும், பாரிய மீன்களை கொள்வனவு செய்கின்ற நிருவனங்களே இவ்வாறான மீன்களை அதிக விலை கொடுத்து வாங்குவதாகவும் மீனவர்கள் குறிப்பிட்டனர்.

(அ)

## ஒலுவில் பிரதேசத்தில் மீனவர்களின் நன்மை கருதி பொதுக் கிணறு திறப்பு



அம்பாறை, மே. 21

ஒலுவில் பிரதேசத்தில் மீனவர்களின் நன்மை கருதிபொதுக் கிணறு திறந்து வைக்கப்பட்டது.

ரஹ்மத் பவுண்டேஷனின் ஏற்பாட்டில் வை.டப்ளியூ.எம்.ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில் கட்டப்பட்ட இப்பொது கிணற்றை திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும், ரஹ்மத்பவுண்டேஷனின் ஸ்தாபகருமான ரஹுமத் மன்சூரின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்ற நிகழ்வுக்கு இலங்கைக்கான மலேசிய உயர் ஸ்தானிகர் எச்.இ. பட்லி ஹிஷாம் ஆதம் பிரதம அதிதியாவும், வை.டப்ளியூ.எம்.ஏ. அமைப் பின் தலைவியுமான பவாஸா தாஹா கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

ஒலுவில் வெளிச்ச வீட்டுக்கருகாமையில் மீனவர் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள், பொதுமக்கள் என பலரும் இப் பொது கிணற்றை பயன்படுத்துவது டன் கலந்து கொண்ட அதிதிகளினால் கிணற்றுக்கருகாமையில் தென்னை மரக்கன்றும் நாட்டி வைக்கப்பட்டது.

(அ)

## சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல்

திருமலை, மே. 21

கிழக்கில் வரலாற்றுச் சிறப்பு மிக்க மூதூர் கிழக்கு - கட்டைபறிச்சான் வடக்கு- சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா நேற்று முன் தினம் இடம் பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி 52 நிமிட சுபவேளையில் சேனையூர் ஸ்ரீ வருணகுல விநாயகர் ஆலயத்திலிருந்து பாரம்பரிய முறைப்படி மடைப்பெட்டி ஊர்வலமும் இடம்பெற்றன.

ஊர்வலம் நாகம்மாள் ஆலயத்தினைச் சென்றடைந்து பக்தி பூர்வமான கிரியையோடு மடைப்பெட்டி வளர்ந்து ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ. அரசரெத்தினால் கையேற்கப்பட்டு பொங்கல் பெருவிழா ஆரம்பமாகியது.



இதனை அடுத்து காவடியாட்டம், பொங்கல் சாடி வைத்து பொங்கல் வைத்தல் என்பனவும் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழப்பு

தெஹ்ரான், மே 21

**ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் வெளி விவகார அமைச்சர் உட்பட ஒன்பது பேரும் உயிரிழந்தனர் என்று அந்த நாட்டு ஊடகமான மெஹர் செய்திச் சேவை நேற்றுத் திங்கட்கிழமை உறுதிப்படுத்தியது.**

அசர்பைஜானில் அணை திறப்பு விழாவில் பங்கேற்ற பின்னர் இப்ராஹிம் ரைசி ஹெலிகொப்டர் மூலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஈரான் புறப்பட்டார்.



இந்த நிலையில், கடுமையான பனிமூட்டத்தில் மலைப் பகுதியைக் கடக்கும்போது கிழக்கு அசர்பைஜான் மாகாணத்திலுள்ள வர்செகான் மற்றும் ஜோல்பா நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ள டிஸ்மார் காட்டில் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானது.

விபத்தில் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியுடன் ஹெலிகொப்டரில் பயணித்த வெளிவிவகார அமைச்சர் உசைன் அமீர், கிழக்கு அசர்பைஜான் மாகாண ஆளுநர் மாலிக் ரஹ்மதி,

கிழக்கு அசர்பைஜானிலுள்ள ஈரானிய உச்ச தலைவர் முகமது அலி,

ஜனாதிபதியின் தலைமை பாதுகாவல் அதிகாரி மெஹ்தி மௌசவி, ஹெலிகொப்டரின் விமானி, துணை விமானி, மெய்ப்பாதுகாவலர் உட்பட 9 பேரும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)



## ஈரான் ஜனாதிபதி மறைவு பிரதமர் மோடி இரங்கல்

தெஹ்ரான், மே 21

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

"இந்தியா - ஈரான் இருதரப்பு உறவை வலுப்படுத்த இப்ராஹிம் ரைசி மேற்கொண்ட பங்களிப்பு எப்போதும் நினைவுகூரப்படும்" என்று தனது இரங்கல் செய்தியில் பிரதமர் மோடி புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

"ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தலைவர் இப்ராஹிம் ரைசியின் துயரமான மறைவு ஆழ்ந்த வருத்தமும், அதிர்ச்சியும் அளிக்கிறது. இந்தியா - ஈரான் இருதரப்பு உறவை வலுப்படுத்த இப்ராஹிம் ரைசி மேற்கொண்ட பங்களிப்பு எப்போதும் நினைவுகூரப்படும். அவரது குடும்பத்தினருக்கும் ஈரான் மக்களுக்கும் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த இப்ராஹிம் ரைசி ஈரானின் எட்டாவது ஜனாதிபதியாவார். (எ)

## அரசமைப்புதான் என் வேதம்

### கூறுகிறார் நரேந்திர மோடி

ஒடிசா, மே 21

அரசமைப்புச் சட்டம் தான் ஆட்சிக்கான மிகப்பெரிய வேதம் என்றும், அதுதான் தனது வழிகாட்டி என்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



ஒடிசாவின் தென்கனல் பகுதியில் நேற்று நடந்த தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்தத் தேர்தல் நேரத்தில் உலக வல்லுநர்கள் பலர் நாடு முழுவதும் வலம் வருகின்றனர். இந்திய வாக்காளர்களின் துடிப்பை அவர்கள் உணர்ந்துள்ளனர். மோடி அரசை மூன்றாவது முறையாக மீண்டும் கொண்டு வர மக்கள் அனைவரும் விரும்புவது, அவர்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அதிலும் நம் தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் இளைஞர்களிடம் இருந்து ஒரு வித்தியாசமான உற்சாகத்தைக் காண்கிறேன். ஒடிசாவின் ஒவ்வொரு கிராமம் மற்றும் தெருவில் இருந்தும் ஒரே மாதிரியான குரல் வருகிறது - ஒடிசாவில் முதல் முறையாக இரட்டை இயந்திர அரசு. இதுதான் அந்த குரல்.


நீங்கள் 25 ஆண்டுகளாக பிஜூ ஜனதா தள(பிஜேடி) அரசாங்கத்தை நம்பி வருகிறீர்கள். இந்த ஆண்டுகளில் ஒடிசா மக்களுக்கு என்ன கிடைத்தது என்று ஒடிசா முழுவதும் தற்போது சுயபரிசோதனை நடந்து கொண்டிருக்கிறது. நான் குஜராத்தில் இருந்து வந்துள்ளேன். சோமநாதரின் தேசத்தில் இருந்து ஜெகந்நாதரின் தேசத்துக்கு எனது வணக்கத்தைச் செலுத்த வந்துள்ளேன். ஆனால், ஒடிசாவில் ஏழ்மையைக் காணும் போது, இவ்வளவு வளமான மாநிலமாகவும், மகத்தான பாரம்பரியத்தைக் கொண்ட என் ஒடிசாவை அழித்தவர் யார் என்று என் இதயத்தில் வலி ஏற்படுகிறது.- என்றார். (எ)

## பிரதமர் ரிஷி சுனக், மனைவியின் சொத்து மதிப்பு ரூ.6,800 கோடி

### இங்கிலாந்து மன்னரை விட அதிகம்

லண்டன், மே 21

பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் மற்றும் அவரது மனைவி அக் ஷதா மூர்த்தியின் சொத்து மதிப்பு 6, 800 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது இங்கிலாந்து மன்னர் சார்லஸின் சொத்து மதிப்பை விட அதிகம் என சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.



2024 ஆம் ஆண்டுக்கான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கோடீஸ்வரர்கள் பட்டியலை சண்டே ரைம்ஸ் வெளியிட்டுள்ளது. அதில் தெரிவித்தவை வருமாறு, இங்கிலாந்திலுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பணக்காரர் பட்டியலில் 44 வயது ரிஷி சுனக் மற்றும் அக் ஷதா மூர்த்தி தம்பதி கடந்த ஆண்டு 275 ஆவது இடத்திலிருந்து 245 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. அவர்களது சொத்து மதிப்பு 651 மில்லியன் பவுண்டாக (இந்திய ரூபாய் மதிப்பில் 6,800 கோடியாகும்) உள்ளது. இது மன்னர் சார்லஸின் சொத்து மதிப்பான 610 மில்லியன் பவுண்டை விட அதிகம்.

அக் ஷதா மூர்த்தியின் வருமானம் அவரது கணவர் ரிஷி சுனக்கின் வருமானத்தை விட மிக அதிகமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2022 - 23 நிதிநிலை அறிக்கையில் 2. 2 மில்லியன் பவுண்டை மட்டுமே ரிஷி சுனக் வருமானமாக ஈட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் இங்கிலாந்தில் வசிக்கும் இந்திய வம்சாவளி இந்துஜா குடும்பம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அவர்களின் சொத்து மதிப்பு 37. 166 பில்லியன் பவுண்டை எட்டியது.

இந்தியாவில் பிறந்த சகோதரர்களான டேவிட் மற்றும் சைமன் ரூபன் கடந்த ஆண்டில் நான்காவது இடத்தில் இருந்து 3 ஆவது இடத் துக்கு முன்னேறியுள்ளனர். அவர்களின் சொத்து மதிப்பு 24. 977 பில்லியன் பவுண்ட் என்று சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது. (எ)

# ஈரான் இடைக்கால ஜனாதிபதியாக முகமட் மொக்பெர் பதவியேற்பார்?

தெஹ்ரான், மே 21


ஈரான் துணை ஜனாதிபதி முகமட் மொக்பெர் ஈரானின் இடைக்கால ஜனாதிபதியாகப் பதவியேற்பார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரானின் சட்டவிதிமுறைகளின் படி ஜனாதிபதியொருவர் உயிரிழந்து 50 நாட்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற வேண்டும்.

1955 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி பிறந்த மொக்பெர் ஈரானின் மதத்தலைவர் ஆயத்துல்லா அலி கமேனிக்கு மிகவும் நெருக்கமானவர்.

ஈரான் குறித்த அனைத்து இறுதி முடிவையும் ஆயத்துல்லா அலி கமேனி எடுப்பவர்.

2021 இல் இப்ராஹிம் ரைசி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவேளை மொக்பெர்



துணை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கோவுக்கு சென்றபோது மேற்கொண்டு ரஷ்ய இராணுவத்துக்கு மேலும் ஏவுகணைகள், ஆளில்லா விமானங்களை வழங்குவதற்கு இணங்கிய ஈரானிய குழுவில் மொக்பெர் இடம்பெற்றிருந்தார் என விடயமறிந்த வட்டாரங்கள் ரொய்ட்டருக்கு தெரிவித்தன.

ஆன்மீகத் தலைவருடன் தொடர்புபட்ட முதலீட்டு நிதியத்தின் தலைவராகவும் இவர் செயல்பட்டுள்ளார்.

அணு அல்லது கண்டங்களுக்கு இடையிலான ஏவுகணைகள் தொடர்பிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்து 2010 இல் ஐரோப்பிய ஒன்றியம் மொக்பெருக்கு எதிராகத் தடைகளை விதித்தது - பின்னர் அந்தத் தடைகளை நீக்கியது குறிப்பிடத்தக்கது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் 17ஆம் திகதிக்கு பின் தேர்தலை நடத்த அதிகாரம்

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 21

**ஜூன் மாதம் 17 ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்ற தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் இவ் வருடம் நடுப்பகுதியில் நிச்சயமாக நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் நெருக்கடி காரணமாக மகாணசபைத் தேர்தல் காணாமல் போயுள்ளமை என்பது தெளிவாக தெரிகிறது என குறிப்பிட்ட அவர், ஜனாதிபதித் தேர்தலையும் பாராளுமன்ற தேர்தலையும் காலம் தாழ்த்த முடியாது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஜூன் மாதம் 17 ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே உள்ளது. வேறு யாருக்கும் அந்த அதிகாரம் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

எனினும், பாராளுமன்றத் தேர்தல் குறித்தான முழுமையான அதிகாரம் தற்போது ஜனாதிபதியிடம் உள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஒக்ஸ்ட் மாதத்துக்குள் எந்த நேரத்திலும் பாராளுமன்றத் தேர்தலை நடத்த முடியும் என ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார். (அ)

# மாணவர்களுக்கு நப்கின்கள் வவுச்சர் வழிகாட்டல் வெளியீடு

கொழும்பு, மே 21

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவிகளுக்கு சனிற்றறி நப்கின்களுக்கான வவுச்சர்களை பெறுவதில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

கல்வி அமைச்சின் புள்ளிவிபர பிரிவால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவிகளின் புள்ளிவிபரத் தகவல்களின் அடிப்படையில் இந்த வவுச்சர்கள் வழங்கப்படுகின்றன.

இந்த வவுச்சர் 1,200 ரூபாய் பெறுமதியானது எனவும் தலா 600 ரூபாய் வீதம் இரண்டு தவணைகளாக பெற்றுக் கொள்வதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வர்த்தகர்களால் மாத்திரம் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட கணனி மென்பொருள் பயன்பாட்டால் வவுச்சர்களுக்கான சனிட்டரி நப்கின்கள் வழங்கப்படும்.

வவுச்சர்கள் மாகாணப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பிரதேச கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் சரி பார்ப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும். சனிட்டரி நப்கின்கள் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களிடம் வழங்கப்பட்டு வகுப்பு ஆசிரியர்கள் ஊடாக விநியோகிக்கப்படும்.

பாடசாலையால் வழங்கப்பட்ட அனைத்து வவுச்சர்களின் பின்புறம் ஒதுக்கப்பட்ட இடத்தில் அதிபரின் அதிகாரபூர்வ முத்திரை இடப்பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குள் மாணவிகள் நப்கின்களை பெற வேண்டும் என்றும் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# மழையால் வயிற்றுப்போக்கு அதிகரிக்கும் அபாய நிலை!

கொழும்பு, மே. 21

தொடரும் மழையினால் வயிற்றுப்போக்கு நோய் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

எனவே, எதிர்வரும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடு பூராகவும் தானம் வழங்கும் நிகழ்வுகளில் சுத்தமான நீரைப் பயன்படுத்துமாறு பொது சுகாதார சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன குறிப்பிட்டார்.

மழையினால் நீர்நிலைகள் மாசுபடும் அபாயம் ஏற்பட்டுள்ளதோடு, வெசாக் பண்டிகைக்கு தானம் வழங்கப்படும் விகாரைகள் முதல் நாள் வரை பதிவு செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஏனைய வருடங்களுடன் ஒப்பிடும்போது இந்த வருடம் தானம் வழங்குவதில் குறைபாடு காணப்படுவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் கூறினார். (அ)

# பீடி இலைகளுடன் லொறியை கடத்திச் சென்ற சார்ஜன்ட், கான்ஸ்டபிள் உட்பட மூவர் சிக்கினர்!

கொழும்பு, மே. 21

பீடி இலைகளுடன் லொறியை கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பகுதியில் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஆனமடு மற்றும் வெலசிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பீடி இலைகளின் பெறுமதி இரண்டு கோடி ரூபா என தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மற்றுமொரு பொலிஸ் அதிகாரியை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வானில் வந்த சந்தேக நபர்கள் பீடி இலைகள் கொண்டு வரப்பட்ட லொறியின் சாரதியை கடத்திச் சென்று தாக்கி பணம் மற்றும் கைத்தொலைபேசிகளை கொள்ளையடித்து விட்டு பீடி இலைகளுடன் லொறியை கடத்திச் சென்றுள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. (அ)

# தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட சிறைச்சாலை அதிகாரிகள் தீர்மானம்

கொழும்பு, மே. 21

சுகயீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை சிறைச்சாலை அதிகாரிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை அந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

25,000 ரூபா சம்பள அதிகரிப்பை கோரி சிறைச்சாலை அதிகாரிகள் இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

இதன் காரணமாக முழு பல்கலைக்கழக அமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழக தொழிற்சங்க பேரவையின் பொதுச் செயலாளர் டி சுரஞ்சீவ தெரிவித்தார். (அ)

# லஞ்ச் சீற்றை முற்றாக தடை செய்ய தீர்மானம்!

கொழும்பு, மே. 21

அடுத்த வருடம் முதல் லஞ்ச் சீற்றை முற்றாகத் தடை செய்ய மத்திய சுற்றாடல் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி அடுத்த ஆண்டு முதல் லஞ்ச் சீற் உற்பத்தி, இறக்குமதி மற்றும் விற்பனையை தடை செய்வது தொடர்பான சட்டப் பணிகளை மத்திய சுற்றுச்சூழல் ஆணையம் மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்திற்கமைய, மக்கும் லஞ்ச் சீற்களை உற்பத்தி செய்து இறக்குமதி செய்வதும் சாத்தியமில்லை என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

# பாதாள குழுக்களை ஒழிப்பதற்கு பொலிஸாருக்கு முழு அதிகாரம்!

## அமைச்சர் டிரான் அலஸ் அறிவிப்பு

கொழும்பு, மே. 21

இந்த நாட்டில் போதைப் பொருள் பாவனையையும், பாதாளக் குழுக்களின் செயற்பாட்டுக்களையும் இல்லாதொழிக்க எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு தான் பொலிஸாருக்கு உத்தவிட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக் கொண்டு உரையாற்றும்போது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


இடம்பெறுகிற குற்றச் சம்பவங்களை தெரியப்படுத்த நாம் தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

அவ்வாறு பொதுமக்கள் அறியப்படுத்தும்போது நாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

அதேபோன்று உங்கள் பிரதேசங்களில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் இருந்தாலும் அதுகுறித்து எமக்கு தெரியப்படுத்துங்கள்.

அத்துடன், போதைக்கு அடிமையாகி பாதிக்கப்பட்டவர்களை புனர்வாழ் நிலையங்களுக்கு அனுப்பிவைத்து அவர்களை நாம் மீட்டெடுப்போம்.

நான் யுக்திய நடவடிக்கையை ஆரம்பித்தமைக்கான காரணம் குடு போதைப்பொருளை பாவிப்பவர்களை விரட்டுவதற்காக அல்ல. விற்பவர்களை முழுமையாக இல்லமல் செய்வதற்காக மாத்திரமே இது.



நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால், போதைப்பொருளிலிருந்து எமது கிராமம், நகரம் மற்றும் நாட்டை வெகு விரைவில் மீட்டெடுக்க முடியும். ஆகவே எங்களுடன் ஒன்றிணையுங்கள்.

இந்த விடயத்தில் எவ்வாறான அச்சுறுத்தல்கள் வந்தாலும், தவறு நடக்கக்கூடாது என நான் பொலிஸ்மா அதிபருக்கும் பொலிஸாருக்கும் நான் உறுதியாக கூறியுள்ளேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், இந்த விடயத்தில் எனக்கு முழுமையான அதிகாரத்தை வழங்கியுள்ளார்.

யுக்திய நடவடிக்கைக்குள் ஜனாதிபதி ஒருபோதும் தலையிட்டது கிடையாது.

ஏனெனில் போதைப் பாவனையிலிருந்தும், பாதாளகுழுக்களிடமிருந்தும் நாட்டை காப்பாற்றவேண்டிய தேவை ஜனாதிக்கும் உள்ளது.

போதையிலிருந்து நாட்டை ஒழிக்கும் எமது வேலைத்திட்டத்தில், கைதுசெய்யப்பட்டவர்கள் வெளியிடுமாறு அநேகமான தொலைபேசி அழைப்புக்கள் வருவதாக பொலிஸாமா அதிபர் கூறினார்.

நான் இந்த அமைச்சுப் பதவியில் இருக்கும் வரை அதற்கு இடமளிக்க முடியாது.

பொதுமக்கள் நேர்மையாகயிருந்து எம்முடன் இணைந்தால் மாத்திரமே நம் நாட்டை, போதைப்பாவனையிலிருந்து மீட்டெடுக்க முடியும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று துக்க...

நேற்று முன்தினம் உயிரிழந்தனர்.

முன்னதாக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி இலங்கைக்கு வந்து உமா ஓயா பல் நோக்கு திட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்ற...

போராட்டங்களில் ஈடுபட முடியாது - இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ் தெரிவித்தார்.

சிறைச்சாலை அதிகாரிகள் பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். இந்த நிலையில், நேற்று அவர் தனது அமைச்சு பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறைச்சாலை அதிகாரிகள் 20ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை கோரியிருந்தனர். என்றாலும் அமைச்சின் செயலாளர், சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட அனைத்து தரப்பினர்களுடன் கலந்துரையாடினோம். இதன்போது 15ஆயிரம் ரூபாய் கொடுப்பனவுக்கு இணக்கம் எட்டப்பட்டது. இதனிடையே, சகல அசர ஊழியர்களுக்கும் 10ஆயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்க அரசாங்கம் தீர்மானித்தது.

எனினும், தொடர்ந்து நடந்த பேச்சுகளின் அடிப்படையில் சிறை அதிகாரிகளுக்கு 15 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரம் ஒன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளோம். எனவே, அவர்கள் பணிப்புறக்கணிப்பை கைவிட வேண்டும். அவர்கள் பணிப்புறக்கணிப்பை சட்டப்படி நடத்த முடியாது - என்றார். (ஐ)

# தொழிற்சாலைக்குள் பொது சுகாதார பரிசோதகர்களை அடைத்தோர் கைது!

யாழ்ப்பாணம், மே 21

பரிசோதனைக்கு சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர்களை தொழிற்சாலைக்குள் பூட்டி வைத்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை - பன்னாலையில் நேற்று திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

ஐரோப்பிய நாட்டில் வதியும் ஒருவரும் சிங்கள பெண் ஒருவரும் இணைந்து பன்னாலையில் உணவுப் பொருள் தயாரிப்பு நிலையத்தை நடத்தி வந்துள்ளனர். இதற்காக அவர்கள் எந்த அனுமதியையும் பெற்றிருக்கவில்லை.

இது தொடர்பில் தகவலறிந்த பொது சுகாதார பரிசோதகர்கள் இருவர் நேற்றைய தினம் அங்கு சோதனைக்கு சென்றுள்ளனர். அந்தச் சமயம் அங்கிருந்தவர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இருவரையும் நிலையத்துக்குள் வைத்துப் பூட்டியுள்ளனர்.

இது தொடர்பில், தெல்லிப்பழை பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்ட நிலையில் அங்கு வந்த பொலிஸார் அடைத்து வைக்கப்பட்டிருந்தவர்களை மீட்டனர்.

இதேநேரம், உணவுப் பொருள் தயாரிப்பு நிலைய உரிமையாளரும் பெண்ணும் அங்கிருந்து தப்பியோடிய நிலையில் நேற்று மாலை பொலிஸில் சரணடைந்தனர். இதைத் தொடர்ந்து, இருவரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# யாழில் 400 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், மே. 21

வடக்குக்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 400 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கவுள்ளார்.

யாழ்ப்பாணம் , தந்தை செல்வா கலையரங்கில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் 400 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

நியமனம் பெறவுள்ள பட்டதாரிகளுக்கான அழைப்பு கடிதங்கள் வடமாகாணக் கல்வி அமைச்சினால் நேற்று திங்கட்கிழமை முதல் அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 21

தென்னிலங்கையில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

களுத்துறை - கட்டுக்குருந்த பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றனர்.

உயிரிழந்தவரின் வீட்டிலேயே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதற்கு ரி - 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## இராணுவத்திடம்...

இங்கு வந்துள்ளேன்.

"இலங்கையில் நீதியை நிலைநாட்ட நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அறிவதற்காகவும் போரால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு சர்வதேச மன்னிப்பு சபையின் ஆதரவை வழங்கவும் நான் இங்கு வந்துள்ளேன்.

"முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பங்கேற்பதற்காக வடக்குக்கு நான் சென்றேன். அப்போது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை சந்தித்தேன். அவர்கள் வெளிப்படுத்துகின்ற துணிச்சலும் - மீள்எழுச்சியும் - நீதியை காண்பதற்கான அவர்களின் உறுதிப்பாடும் எனது மனதை தொட்டுள்ளது.

"இலங்கை போரில் மிகப்பெருமளவானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது? காணாமல் ஆக்கப்படுதல் என்பது மிக மோசமான வன்முறை - அது முடிவுக்கு வராது - உங்க ளுக்கு தெரியாது, பாதிக்கப்பட்டவர்களுக்கு பல வருடங்களுக்கு இந்த வலி தொடரும் - மரணத்தைவிட இது வலிமிகுந்தது. வலியும் வேதனையும் மிக மோசமானதாகக் காணப்படும் உளவியல் சித்திரவதை. நாளாந் தம் - ஒவ்வொரு நாளும் - ஒவ்வொரு வார மும் - தசாப்தங்களாக இந்த வலியும் வேதனையும் தொடரும். இது இலங்கைமீது விழுந்த கறை. இந்தக் கறையை அகற்ற ஒவ் வொரு இலங்கை பிரஜையும் முன்வரவேண் டும்.

அந்த குழந்தைகள் எங்கே? நான் கைந்து மாத குழந்தைகள் - மூன்று - நான்கு வயதா னவர்கள். நான் அவர்களின் படங்களைப் பார்த்திருக்கின்றேன். 15 வருடங்களாகியும் பதில் இல்லை - இது மிக நீண் டகாலம். இது மன்னிக்க முடியாத குற்றம் - இவர்கள் குறித்து அரசாங்கம் பதிலளிக்கவேண்டும்.

இவர்கள் தாங்களாக முன்வந்து சரணடைந்தவர்கள். சரணடைவதற்கான பகுதிக்கு தாங்களாக சென்று சரணடைந்தார்கள். அவர்களின் குழந்தைகள் எங்கே - அவர்களுக்கு என்ன நடந்தது?" - என்றும் கேட்டார். (ஐ)

## ஐ.எஸ்...

அகமதாபாத் விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிக ரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் ஐ.எஸ். அமைப்பை சேர்ந்த உயர்மட்டத் தலைவர்கள் இருவர் சர்வதேச கடல் எல்லையில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இந்தியாவின் உத்தரகாண்ட், ஹரியானாவை சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதியுடன்...

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் உரிய தினத்தில் நடத்தப்படும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற யோசனையை ஜனாதிபதியிடம் முன்வைத்தோம். இருப்பினும், ஜனாதிபதி சாதகமான பதிலை இதுவரை குறிப்பிடவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தினால் அரசியலில் வீரவசனம் பேசும் தரப்பினரின் உண்மை முகம் வெளியாகும். பொதுத் தேர்தல் நடைபெற்றால் சிறந்த அரசியல் சூழல் ஏற்படும். இதன் காரணமாகவே பொதுத்தேர்தலை கோருகிறோம்.

எதிர்வரும் ஜூலை மாதம் பாராளுமன்றம் கலைக்கப்படும் என்று முன்னாள் ரஷ்ய தூதுவர் குறிப்பிட்டமை அவரின் தனிப்பட்ட கருத்தே தவிர, கட்சியின் நிலைப்பாடல்ல. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் பற்றி கட்சியின் நிலைப்பாட்டை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு அறிவிப்பார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இடைக்கால பதவிக்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை தெரிவு செய்தோம். 2022ஆம் ஆண்டு வரை இன்று வரை அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுகளில் ஈடுபடவில்லை. எந்த இணக்கப்பாடும் எட்டப்படவில்லை - என்றார். (ஐ)

# கொழும்பில் தீ விபத்து ஒருவர் உயிரிழந்தார்!

கொழும்பு, மே 21

தளபாடங்கள் தயாரிக்கும் இரண்டு மாடிக்கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு - மொரட்டுமுல்லை பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தத் தீ விபத்தில் 57 வயது நபரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அந்தத் தொழிற்சாலையின் காவலாளியாவார். தீயை அணைக்க முயன்ற போது பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகி கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் நேற்றைய தினமே அங்கேயே மரணமானார்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இராணுவ வாகனம்...

சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று திங்கட்கிழமை புத்தூர் - மீசாலை வீதியில் வீரவாணி சந்தியில் இடம்பெற்ற இந்த விபத்தில் புத்தூர் - வாதரவத்தையை சேர்ந்த சுதாகரன் சாருஜா (வயது 23) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வாதரவத்தையை சேர்ந்த குறித்த யுவதி உறவினரின் வீட்டுக்கு பால் கொடுத்து விட்டு, தனது வீட்டுக்கு திரும்புவதற்கு வீரவாணி சந்தியை கடப்பதற்காக சைக்கிளில் வீதியோரமாகக் காத்திருந்தார். அந்த சமயம் வேகமாக வந்த இராணுவ வாகனம் கட்டுப்பாட்டை இழந்து யுவதியை மோதித் தள்ளியது. அத்துடன், அருகில் நின்ற மரத்துடன் மோதுண்டு கவிழ்ந்தது.

இதில் யுவதி தலையில் படுகாயமடைந்தார். அவரை அச்சுவேலி மருத்துவமனைக்கு கொண்டுசென்றபோது வழியிலேயே உயிரிழந்தார். அச்சுவேலி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட யுவதியின் உடல் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது.

அச்சுவேலி பொலிஸார் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## எதிர்காலத்தில்...

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக நாம் தொடர்ந்தும் கலந்துரையாடல்களையும் - நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம்.

இதேசமயம், ஜனாதிபதித் தேர்தலோ, பாராளுமன்றத் தேர்தலோ எது நடந்தாலும் நாங்கள் அதனை எதிர்கொள்வதற்குத் தயாராகவே உள்ளோம் -என்றும் கூறினார். (ஐ)

## வற்றாப்பளை...


இதன்போது, ஏராளமான பக்தர்கள் தூக்குக்காவடி, பால் காவடி, கற்பூர சட்டி ஏந்துதல், அடியழித்தல், மடிப்பிச்சை கேட்டல் எனப் பல்வேறு நேர்த்திக் கடன்களையும் செலுத்தினர்.

கடும் மழைக்கு மத்தியிலும் நேற்று காலை முதல் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் வற்றாப்பளை அம்மன் ஆலயத்துக்கு வருகை தந்தனர். இவ்வாறு வருகை தரும் பக்தர்களுக்காக சிறப்பு ஏற்பாடுகள் முன்னரே செய்யப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## கெஹலியவுக்கு மீண்டும் மறியல்



கொழும்பு, மே 21

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 8 சந்தேகநபர்களை எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மாளிகாகந்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது தொடர்பான வழக்கு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் மருந்து இறக்குமதி சம்பவம் தொடர்பான வழக்கில் சந்தேகநபர்கள் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்டது. (எ)



புத்தளத்தில் கடும் மழை

## பாடசாலைகளுக்கு இன்றும் விடுமுறை

புத்தளம், மே 21

சீரற்ற காலநிலை காரணமாக புத்தளம் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் இன்று மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகம் இதனை அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திங்கட்கிழமை அதாவது நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்ட நிலையில், வானிலைக்கு ஏற்ப எதிர்வரும் நாட்கள் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## விஜயதாஸ தலைவராக செயல்பட நீதிமன்று தடை!

கொழும்பு, மே 21

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவராக விஜயதாஸ ராஜபக்ஷவும் பதில் பொதுச் செயலாளராக கீர்த்தி உடவத்தவும் செயல்பட கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைகால தடை பிறப்பித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க தாக்கல் செய்த மனுவை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிவான் சந்துன் விதான பிறப்பித்துள்ளார்.

இந்த தடையுத்தரவு எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் நீதிமன்றம் உத்தவிட்டது. (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கே அரசு தயாராகி வருகிறது

## ஐக்கிய தேசிய கட்சி தகவல்

கொழும்பு, மே 21

**யார் என்ன சொன்னாலும் ஜனாதிபதித் தேர்தலுக்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகி வருகிறார்- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தொழிற்சங்கங்களின் பணிப்பாளருமான சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.**




ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பாராளுமன்றத் தேர்தலே முதலில் நடைபெறும் என ஒரு சிலர் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக ஜூன் மாதம் நடுப்பகுதியில் பாராளுமன்றம் கலைக்கப்படும் என உதயங்க வீரதுங்க தெரிவிக்கிறார்.

பாராளுமன்றத் தேர்தலே ஆரம்பாக இடம்பெறும் என்பதை உறுதியாக தெரிவிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்திருந்தார்.

அதேநேரம் அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட மாட்டார் என சிலர் பிரசா ரம் செய்து வருகின்றனர்.

இவ்வாறு தங்களின் அரசியல் நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் அரசமைப்பின் பிரகாரம் செப்ரெம்பர் 18 ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 16 ஆம் திகதிக்கும் முன்னர் ஜனாதிப தித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அதேநேரம் பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கி றது. ஆனால் நாடும் அரசாங்கமும் ஜனாதிபதித் தேர்தலுக்கே தயாராகி வருகின்றன. ஜனாதிபதியும் ஜனாதிபதித் தேர்தலுக்கே தயாராகி வருகிறார்.

அத்துடன் அரசமைப்பின் பிரகாரம் இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என ஜனாதிபதி பகிரங்கமா கத் தெரிவித்திருந்தார்.

அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சி சம்மேளனத்தின்போதும் இதனை ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அதனால் ஒக்டோபர் 16 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என சிலர் தெரிவித்து வருகின்றனர்.

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டைப் பொறுப்பேற்க யாரும் முன்வராத நிலையில், ரணில் விக்கிரமசிங்கவே முன்வந்து, பெரும் சிரமத்துக்கு மத்தியில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தார்.

அதனால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ரணில் விக்கிரமசிங்கவே மிகவும் தகுதியானவர். அவர் போட்டியிடுவதை யாராலும் தடுக்க முடியாது. அவருக்கே மக்கள் ஆணை இருக்கிறது- என்றார். (எ)

# சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியில் மாற்றம்?

கொழும்பு, மே. 21

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன தலைமையில் நேற்று முன் தினம் கூடிய சுமார் ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட சட்டத்தரணிகள் சங்கத்தின், கூட்டத்தில் தலைவர் பதவியிலிருந்து கௌசல்ய நவரத்னவை நீக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கௌசல்ய நவரத்னவை சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து நீக்கி, அவருக்கு பதிலாக வேறொரு சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவரை தலைமை பதவிக்கு நியமித்து, சட்டத்தரணிகள் சங்கத்தின் கடந்தகால கணக்கு அறிக்கைகளை அங்கீகரிக்காமல் நிராகரிக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இது சட்டத்தரணிகள் சங்க வரலாற்றில் கறுப்பு நாளாக குறிப்பிடப்படும் என இந்த கூட்டத்தில் தலைமை தாங்கிய சிரேஷ்ட சட்டத்தரணி அக்கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இலஞ்ச ஊழல் விசாரணைக்கு ஜெய்க்கா வழங்கிய நிதியை அதன் தலைவர் உட்பட நால்வரின் பெயரைக் கூறி பெற்றுக்கொண்ட சம்பவம் காரணமாக சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு கணக்கு அறிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த இந்த சம்பவத்தை விசாரித்து இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை அளிக்க ஐந்து மூத்த வழக்கறிஞர்கள் கொண்ட குழுவை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நியமித்துள்ளது. (அ)

## கடவுச்சீட்டு விவகாரம் டயானா தலைமறைவு



கொழும்பு, மே 21

கடவுச்சீட்டு விவகாரம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவை சந்தேகநபராகக் குறிப்பிட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இதன்படி, உரிய விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சந்தேகநபரை அவரது இல்லத்தில் காணவில்லை என குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கொழும்பு பிரதான நீதிவானிடம் தெரிவித்தனர். இதனையடுத்தே மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (எ)

## திடீரென உடைந்து வீழ்ந்தது வெசாக் அலங்கார தோரணம்



கொழும்பு, மே 21

வெசாக் தினத்தை முன்னிட்டு கொழும்பு கொம்பனி தெருவில் கட்டப்பட்டிருந்த வெசாக் அலங்கார தோரணம் திடீரென உடைந்து விழுந்தது.

இந்த வெசாக் தோரணமானது கடும் மழை மற்றும் காற்றால் உடைந்து வீழ்ந்ததாகத் தெரியவருகிறது. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org